# தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

## CSI Tamil Parish Alain, UAE

# மன்னா..

உன்னதமான கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

சங்கீதம் 7.17

பொழிவு: 13
ஆகாரம்: 06

June '2021

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல்லெயன்

# C.S.I. TAMIL PARISH ALAIN, UAE

| REGULAR SERVICE | BIBLE STUDY | CHILDRENS BIBILE SCHOOL |
|---|---|---|
| FRIDAY'S<br>6:30 PM – 7:30 PM<br>CHURCH<br>MAIN HALL<br><br>EVANGELICAL CHURCH CENTRE,<br>KENAD HOSPITAL CAMPUS,<br>ALAIN, UAE | WEDNESDAY'S<br>7:30 PM – 8:30 PM<br>ONLINE<br>zoom<br>CONT: REV. S. P. BASKAR<br>056 7668 343 | FRIDAY'S<br>4:00 PM – 5:30 PM<br>ONLINE<br>zoom<br>CONT: MRS. AUGUSTA LAWRANCE<br>056 641 1676 |
| **MEN'S FELLOWSHIP** | **WOMEN'S FELLOWSHIP** | **YOUTH FELLOWSHIP** |
| 2'ND THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MR. ASHOK KUMAR<br>050 842 9659 | 3'RD THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MRS. SHALY MELBIN<br>056 394 1817 | 4'TH THURSDAY<br>7:30 PM – 9:00PM<br>ONLINE<br>zoom<br>CONT: MR. SANTHOSH KUMAR<br>056 875 2723 |

## OTHER MEETINGS – VIA ZOOM

MONTHLY FASTING PRAYER: 1ST FRIDAY 11:AM TO 1:00PM

MONTH END/NEW MONTH STARTING PRAYER: (LAST DAY OF MONTH) 11:30 PM TO 12:30 PM

FOR MINISTRY DETAILS & ENQUIRES – PLEASE CONTACT

REV. S.P. BASKAR, THE PRESBYTER
CSI TAMIL PARISH ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343
Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org

# FROM THE PASTOR

கிறிஸ்துவுக்குள் அன்பான இறை மக்களே!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள்; கேளுங்கள்,
அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும். ஏசாயா:55:3

Incline your ear, and come to me; hear, that your soul may live. Isaiah 55:3

ஆண்டவரின் வார்த்தைக்கு செவிகொடுத்து அவரின் வார்த்தையில் நம்பிக்கை உடையவர்களுக்கு....

- நம்பிக்கை நிறைந்த வாழ்வு கொடுக்கிறார் (ஏசாயா 55:1,2)
- நல்வாழ்வை அருளுகிறார் (ஏசாயா 55:3)
- நாள்தோறும் பலன் கொடுக்கிறார் (ஏசாயா 55:10,11) இப்படிப்பட்ட வாழ்வை நமக்கு கொடுத்து ஆண்டவர் நம்மை வழி நடத்துவாராக....

கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வருகின்ற நமது ஆண்டவரை உங்களுடன் இணைந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து துதிக்கின்றேன்... தொடர்ந்து இந்த கோவிட்-19 காலக்கட்டத்தில் இந்த தேசத்தில் நம்மை பாதுகாத்து வழி நடத்தி வருகின்ற ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். அத்துடன் நமது தாய்நாட்டில் (இந்தியா) ஏற்பட்டிருக்கின்ற கொரோனா இரண்டாம் அலையில் நிமித்தமாக பல லட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள், அநேக மரணங்கள், கண்ணீர் வேதனையுடன் காணப்படும் குடும்பங்கள் தங்கள் உறவுகளை இழந்து நிற்கும் குடும்பத்தினர் குறிப்பாக நமது திருச்சபையில் அனேக குடும்பத்தினர் தங்கள் தகப்பனை, தாயை, சகோதரனை தங்கள் தாய்நாட்டில் இழந்து இருக்கின்றார்கள். இப்படி பட்ட குடும்பங்களுக்கு கடவுள் ஆறுதலை, சமாதானத்தைக் கொடுக்க தொடர்ந்து ஜெபிக்க அழைக்கப்படுகின்றோம்.

தொடர்ந்து நமது திருச்சபையில் Zoom வழியாக நடைபெறும் அனைத்து கூடுகைகள் மற்றும் ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



இந்த கோவிட்-19 காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விற்க்காக, புதிய கல்வி அண்டிற்க்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக... இந்த கொரோனா இரண்டாம் அலை மிகவும் பயத்தை ஏற்படுத்துகின்றது. இதிலிருந்து விடுவிக்கப்பட ஊக்கமாய் ஜெபிக்கும் மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்...

Rev. S. P. Baskar

DOWNLOAD OUR MONTHLY MANNA BY VISITING OUR CHURCH WEBSITE.
WE REQUEST YOU TO READ AND PARTICIPATE.

**http://www.csitamilparishalain.org**

**மேற்குறிப்பிட்டுள்ள திருச்சபையின் இணையத்தளத்தை பயன்படுத்தி மாதாந்திர மன்னாவை நீங்கள் பதிவிறக்கம் செய்து; படித்து, பயன்பெற பங்குபெற அன்புடன் அழைக்கிறோம்**

# நீதியுள்ள கடவுளிடம்.. நீதிக்காக மன்றாடுதல்.....

நான் கர்த்தரை அவருடைய நீதியின் படி துதித்து, உன்னதமான கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவேன். சங்கீதம் 7:17

**I will praise the Lord according to His righteousness and will sing praise to the name of the Lord Most High. -Psalms 7:17**

**முன்னுரை:** சங்கீதம்:7 - தான் படும் துன்பத்தின் மத்தியில் தாவீது அநீதியைக்குறித்து ஆண்டவரிடம் புலம்பி அழுகின்ற பாடலாகும். அவருக்கு அநீதி இழைத்த (அ) அநீதி செய்தவருக்கு எதிராக பாடப்பட்ட பாடலாக இது அமைகிறது. எங்கெல்லாம் அநீதி தலைவிரித்துத் தாண்டவம் ஆடுகிறதோ, அங்கெல்லாம் இப்பாடலைப் பொருத்திக் கொள்ளலாம். இந்த சங்கீதத்தில் நீதி, நேர்மை, நீதிபதி, நேர்மையுள்ள ஆகிய சொற்கள் பலமுறை இருப்பதை காணலாம். எனவே நல்லவர்களுக்கும், நலிந்தோருக்கும் நீதி வழங்குவது என்பது கடவுள் அளிக்கும் மீட்பின் அடையாளம் என்பதை புரிந்துக்கொள்ள அழைக்கப்படுகிறோம்..

Psalm:7 The title of this individual lament from David refers to an otherwise unknown incident in this life when a man of Benjamin (the tribe of Saul) slandered David. The psalm enables those who have been unfairly criticized (v.3-5) and persecuted to call on God for help.

**சங்கீதம் 7:1-2 ஆதரவும், அடைக்கலமும் வேண்டி மன்றாடுதல்:**...என் தேவனாகிய கர்த்தாவே...(கடவுளாகிய ஆண்டவரே)... கானானிய மக்கள் ஆண்டவரை "எல்" "எலோகிம்" என்ற சொற்களால் அழைத்தனர், இதற்கு வலிமை அல்லது சக்தி என்பதாகும். தமிழில் இந்த சொல் "கடவுள்" இதற்கு எல்லாவற்றுக்கும் மேலானவர், கடந்தவர் என்பதாகும். இஸ்ரயேல் மக்களுக்கு ஆண்டவர் தம்மை வெளிப்படுத்திய பெயர் "யாவே" என்பதாகும். அதாவது துன்பத்தின், துயரத்தின், மத்தியில் ஓடிவந்து உதவி செய்பவர், அவர்களுடன் எப்போதும் இருப்பவர், வாழ்க்கையின் போராட்டத்தில் அவர்களுடன் நடப்பவர் (யாத்:3:7-10) அப்படிப்பட்ட ஆண்டவரிடம் ஆதரவு கேட்டு அடைக்கலத்திற்காக என் தேவனாகிய கர்த்தாவே என்று வேண்டுவது ஆகும்.

**சங்கீதம் 7:3-5: தன் குற்றமின்மையை கடவுளிடம் விளக்குதல்:**.. என் தேவனாகிய கர்த்தாவே...... என் கைகளில் நியாயக்கேடிருக்கிறதும்.... என்பது தான் குற்றமில்லாதவரும், நீதியுள்ளவர் என்பதையும் காரணமில்லாமல் சத்ரு வானவன் தன்னை பின்தொடர்வதையும் ஆண்டவரிடம் தன் குற்றமின்மையை விளக்குவதாகும்...

**சங்கீதம் 7:6-9: ஆண்டவர் நீதி வழங்கிட வேண்டுதல்...**கர்த்தாவே, நீர் உன்னுடைய கோபத்தில் எழுந்திருந்து... இது ஆண்டவர் நீதியை நிலைநாட்டுபவர் என்பதாகும். கடவுளின் அடிப்படை குணமே அவர் நேர்மை உள்ளவர் என்பதாகும். இதற்கு எபிரேயத்தில் "செதெக்கா" (Sedequah) என்பதாகும். இதற்கு பொருள் நீதி, நேர்மை என்பதாகும். திரும்பவும் உன்னதத்திற்கு எழுந்தருளும் ஆண்டவரே சரியான நீதி வழங்கும் என்று மன்றாடுவது ஆகும்...

**சங்கீதம் 7:10-17- நேர்மையுள்ள ஆண்டவர்மீது நம்பிக்கை.....** என் கேடயம்... என்பது பாதுகாப்பு, என் தலைவர், என் அடைக்கலம், அவர் என்னை நீதியின் பாதையில் நடத்துபவர் என்று நேர்மையுள்ள ஆண்டவர்மீது நம்பிக்கைக்கொள்வதாகும்...

நேர்மையற்றோர் அடையும் தண்டனை மூன்று வகையில் கூறப்படுகிறது. அது......

**ஆண்டவரின் கோபம் அவர்கள் மேல் விழும் (வ.12,13)**

**தீமையைக்கருத்தரித்தத் தீவினையை அவர்கள் பெற்றெடுப்பர் (வ.14)**

**தாம் வெட்டிய குடழியில் தாமே விழுவர் (வ.15,16)**

எனவே நேர்மையானவர்கள் மீது ஆண்டவர் இரங்குகிறவர், உடன் இருப்பவர்.. எனவே.... நான் கர்த்தரை அவருடைய நீதியின் படி துதித்து, உன்னதமான கர்த்தருடைய நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவேன். சங்கீதம் 7:17 என்று சொல்லி ஆண்டவர் நேர்மையுள்ளவர் நேர்மையானவர்களுடன் இருப்பவர் என்று துதித்து பாடும் பாடலாக புரிந்துக்கொள்ள அழைக்கப்படுகின்றோம்...

**நிறைவாக....**

இன்றைக்கு நாமும் நீதியுள்ள, நேர்மையான ஆண்டவருக்கு முன்பாக நீதி,நேர்மை,உண்மை, தூய்மை, அன்பு இவற்றை உடையவர்களாக இருக்க ஆண்டவரிடம் அர்ப்பணிப்போமாக.......

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!!

இறைப்பணியில் உங்கள் ஆயர்....

*Rev. S. P. Baskar*

# எஸ்தர்



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே.... உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

எஸ்தர் என்னும் யூதப் பெண் தன் மக்கள்பால் கொண்டிருந்த பேரன்பினால் எதிரிகளால் அழிக்கப்படாதவாறு மிகுந்து துணிவுடன் எவ்வாறு செயல்பட்டார் என்பதை சிந்திக்கக அழைக்கப்படுகிறோம்.

**யூதர்களின் விடியல் எஸ்தர்:** யூதர்களை ஆண்டுவந்த அகஸ்வேரு மன்னனின் தளபதியான ஆமான் யூதர்களைக் கொடுமைப்படுத்தி, அடிமைப்படுத்தி அழிக்க உருவாக்கிய திட்டத்தை முறியடித்தவர் எஸ்தர் என்று சொன்னாள் மிகையாகாது. யூதர்களின் விடிவெள்ளி அல்லது விடியல் என்று சொல்லலாம். அந்தளவுக்கு தம்முடைய பெண்மையையே முழுமையாக அற்பணித்து யூதர்களின் வாழ்வுக்காக போராடியவர் (எஸ்தர்2:12-14) யூதர்கள் ஓரிறைக் கோட்பாட்டில் நம்பிக்கை உடையவர்கள். இவர்களின் நம்பிக்கையை அசைக்கும் படி பல சோதனைகள் ஏற்பட்டன. பல குறுநில மன்னர்கள் தங்களின் உருவ சிலைகளை வணங்கும்படி வற்புறுத்தினர். தங்களின் அதிகாரத்திற்கு அடிபணியாத யூத மக்களைக் கொன்று குவித்தனர். இப்படிப்பட்ட துன்புறுத்தலைக் கடைபிடித்தவர் ஆமான். அவரை எதிர்த்தவர் மொர்தேகாய் (எஸ்தர்:3:2) எனவே ஒட்டுமொத்த யூதர்கள் அனைவரும் துன்பப் படுத்தப்பட்டனர். இவர்கள் இக் கொடுமையில் இருந்து மீட்டெடுக்க எஸ்தர் தம்மை ஒரு கருவியாகப் பயன்படுத்த சம்மதித்தார் இதிலே வெற்றியும் கண்டார்.

**அழகும் அறிவும் உடையவர் எஸ்தர்:** கன்னிப்பெண்கள் அனைவரிலும் அவரே மன்னரின் கண்களில் தயவு பெற்றார். எனவே அரசியாகும் தகுதியையும் பெறுகிறார் (எஸ்தர்2:17,18) இதனால் வஸ்தி அழகானவர் இல்லையா? எனும் வினா எழும்புவது இயல்பானதே. வஸ்திக்கு சுயமாக முடிவெடுக்கும் உரிமை சற்று அதிகமாகவே இருந்தது. மேலும் யூதர்களுக்காகப் பணியாற்ற வேண்டும் என்ற நெருக்கடி வஸ்திக்கு ஏற்படவில்லை. பிறர் முன்னிலையில் தம் அழகைக்காட்ட விரும்பவில்லை என்பது மட்டும் தெளிவாகிறது. (எஸ்தர்1:12)ஆனால் எஸ்தர் தமக்கிருந்த நெருக்கடியில், அன்றைக்குள்ள சூழல் தன்னை ஒரு பயனுள்ள செயலுக்கு பயன்படுத்திக்கொள்ள ஒப்படைக்கிறார். மொர்தெகாய் தனக்குள் கட்டளையிட்ட வற்றை மீறி நடக்காமல் பார்த்துக்கொண்டார் (எஸ்தர்2:20) இது இவரின் புத்திக்கூர்மையை காட்டுகிறது.



**ஒப்படைப்புள்ள பெண் எஸ்தர்:** யூதர்களின் வாழ்வு வளம்பெற தம்மை ஒப்படைத்தனர் எஸ்தர். சட்டத்திற்குப் புறம்பாக இருந்தாலும், மன்னரிடம் சென்று முறையிடுவேன். இல்லாவிட்டால் அழிவதாய் இருந்தாள் அழிகிறேன் என்று சொல்லி சூளுரைக்கின்றார் (எஸ்தர்4:16). இது எஸ்தரின் ஒப்படைப்பை அடையாளப் படுத்துகிறது.

**பக்தியுள்ள பெண் எஸ்தர்:** இவருடைய பக்தியினால் நாட்டில் அமைதியும், பாதுகாப்பும் யூதருக்குக் கிடைக்க வழிவகை செய்தார் எஸ்தர். (எஸ்தர் 9:25) இரட்டுடுத்தி, சாம்பலில் அமர்ந்து உண்ணா நோன்பு இருந்தாள் மட்டுமே பக்தி என்று எண்ணிக்கொண்டிருந்த காலத்தில் மக்களுக்கு அமைதியும், பாதுகாப்பும் கிடைக்கப் படுவதே பக்தி என்பதே தன் செயல்பாடுகளினால் நிரூபித்துக் காட்டினார். எஸ்தர் நாட்டில் பஞ்சம், பட்டினி, போர், லஞ்சம், ஊழல் போன்றவை ஆமான் மூலம் நிகழ்ந்தன. அதை இளம் பெண்ணொருத்தி தம்முடைய தியாகத்தினாலும், துணிவினாளலும் முறியடிக்கின்றார். இதற்கு அவருடைய இறை நம்பிக்கையும் கடவுள் மீது கொண்டிருந்த பற்றுறுதியும் மிகவும் உதவி செய்தன. இது எஸ்தரின் பக்தியின் நேர்மையைக் காட்டுகிறது.

**பூரிம் பெருவிழா நாயகி எஸ்தர்:** அபிகாயிலின் மகளான எஸ்தர், யூதரான மொர்தெகாய் இவரின் முயற்சியால் ஆமானின் சதி முறியடிக்கப்பட்டது. இவர் "பூர்" என்னும் சீட்டை எழுதிப்போட்டு யூதர்களை அழிக்க ஒரு அறிவிப்புச் சீட்டை போடுகின்றார். ஆனால் எஸ்தரும், மொர்தேகாயும், தங்களின் இணைந்த செயல் பாடுகளினால் அவற்றை மேற்கொள்கின்றனர். இதனால் "பூர்" என்னும் வேர்ச் சொல்லிலிருந்து உருவான "பூரிம்" எனும் திருவிழா இரண்டு நாள் அனுசரிக்கப்படுகிறது. இந்த இரண்டு நாளில் மொர்தேகாய் பட்ட துன்பங்கள், மக்கள் எவ்வாறு விடுவிக்கப்பட்டனர் என்பது குடும்பங்களில் கதை வழியாய் சொல்லுதலும், வாசித்தலும் இருக்க வேண்டும் (எஸ்தர் 9:19-27) எனவே எஸ்தரின் பங்களிப்பை நினைவு கூறும் "பூரிம்" பெருவிழாவின் நாயகி என்பதை நினைவு கூறுவோம்.

இவ்வாறு எஸ்தரின் ஒப்படைப்பையும, தியாகத்தையும், பக்தியையும் நினைவுகூர்ந்து நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக....
அருட்பணியில் உங்கள் ஆயரம்மா...
*Mrs.E.Nancy Baskar...*

# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே..

இரட்சகர் இயேசுகிறிஸ்துவின் ஈடுஇணையற்ற நாமத்தில் அனைவருக்கும் ஜூன் மாத வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த மாதம் முழுவதும் நம்மை போஷித்து போதித்து வழிநடத்தின தேவாதி தேவனை நன்றியோடு துதிப்போம்.

இவ்வுலகமும் – வாழ்வும் - பணிகளும் நிரந்தரமற்றது…என்பதை நம் கண்களுக்குப் புலப்படாத விஷக்கிருமி நமக்கு அடிக்கோடிட்டு காட்டிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில்; நாம் நல்ல உடல் சுகத்துடன் வாழ்வதற்கு ஆண்டவர் பாராட்டுகின்ற கிருபைகளை எண்ணி திருச்சபையாக நன்றி செலுத்துவோம்.

தொற்று நாட்களில் வாழ்வாதாரம் இழந்து, அன்பானவர்களை இழந்து, கண்ணீரின் பள்ளத்தாக்கை கடக்கிற யாவருக்காகவும், நோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள் விடுதலைபெறவும்,நாம் யாவரும் கண்ணீரோடும் ஊக்கத்தோடு திறப்பிலே நிற்போம்.

இணையதளம் மூலமாக ஆண்கள் ஐக்கிய சங்கம், பெண்கள் ஐக்கிய சங்கம், வாலிபர் கூடுகை, சிறுவர் வேதாகம பள்ளி கூடுகை மற்றும் ஆராதனைகளை நடத்துவதற்கு முழு ஒத்துழைப்பு அளித்த போதகர் ஐயா அவர்களுக்கும், அதன் பொறுப்பாளர்களுக்கும் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். சபையார் தவறாமல் ஆன்லைன் மூலமாக ஒளிபரப்பப்படும் ஆராதனைகளில் பங்கு பெறுங்கள்; கர்த்தருடைய சத்தத்தை வேத வசனங்களின் வாயிலாக அனுதினமும் கேட்போம்; கர்த்தரோடு தொடர்ந்து நிலைத்திருப்போம்.

அன்பானவர்களே…தாவீது அரசனைப்போல் பவுல் அப்போஸ்தலனைப்போல் கர்த்தருடைய நாமத்தை குறித்தே மேன்மை பாராட்டுவோம். நாம் இவ்வுலகில் பெற்றுள்ள எந்தநன்மையும் தேவன் நமக்கு ஈவாக தந்தது; எனவே நம்மை இந்த உலகில் ஆசீர்வதித்து நடத்துகின்ற தேவனை உயர்த்துவோம்...இப்புதிய மாதத்தில் தெய்வ பயத்துடன் ஆண்டவரை பின்பற்றுவோம்..

இறையாசி உங்களுடன் தங்கி இருப்பதாக.
இப்படிக்கு கிறிஸ்துவின் பணியில்…

Suresh Rajan

# தமிழ் வேதாகமத்திலுள்ள அர்த்தம் புரியாத வார்த்தைகள்



| | | |
|---|---|---|
| அபேட்சை | விருப்பம், எதிர்பார்ப்பு | 1சாமு 9:20; யோபு 34:36, நீதி 10:28; 11:7 |
| அப்போஸ்தலர் | திருத்தூதுவர் | மாற் 6:30 |
| அமஞ்சிவேலை | அடிமை வேலை | 1ராஜா 5:13,14; 9:21 |
| அமரிக்கை | அமைதி | ஏசா 32:17 |
| அம்பறாத்தூணி | அம்புகளை வைக்கும் கூடு | ஆதி 27:3; சங் 127:5 |
| அம்பாயம் | வலி | ஏசா 26:17; மீகா4:10 |
| அம்பாரம் | பெரும் குவியல் | 2நாளா 31:10; உன்7:2 |
| அயனம் | கிரகணங்கள் சுற்றும் பாதை | நியா 5:20 |
| அயுக்தம் | அறிவற்ற விவாதம் | 2தீமோ 2:23 |
| அரணிப்பானது | உறுதியானது | எண் 13:28; 21:24; 24:21 |
| அரதேசி | அகதி, அந்நியர் | 1நாளா 29:15 |
| அரிபிளவை | புற்றுநோய், தசை அழுகல் | 2தீமோ 2:17 |
| அருக்களிப்பு | பயமுறுத்துதல் | யோபு 3:5 |
| அருண்டு | திடீரென்று | ரூத் 3:8 |
| அர்ப்பிதம் | புனிதமான | எசே 45:1; எசே 48:8,10,12,18,20,21 |
| அல்லத்தட்டுதல் | புறக்கணித்தல் | சங் 141:5 |

# ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம்..!

ஒரு கணவனும் மனைவியும் ஐந்து குழந்தைகளுடன் வாழ்ந்து வந்தார்கள். வறுமைக்கு மேல் வறுமை அவர்களை வாட்டியது. கடன் பளு அவர்கள் குடியிருந்த சொந்த வீட்டையும் விழுங்கியது.

ஒரு நாள் அவர்கள் பிள்ளைகளில் ஒருவர் கடைக்கு சென்றிருந்தான். பாவம் அவன் ஏழை என்ற ஒரே காரணத்திற்க்காக, அவன் செய்யாத ஒரு திருட்டு குற்றத்தை அனியாயமான அவன்மேல் கடைக்காரன் சுமத்தினான். அந்த பிள்ளை அழுதுகொண்டே வீட்டுக்கு வந்தான். இந்த சம்பவம் அந்த சிறுவனின் தாயாரை வெகுவாக பாதித்தது.

கணவனும் வேலைக்கு சென்றார். அவளது மூத்த நான்கு பிள்ளைகளும் பள்ளிகூடம் சென்றபின், தனது கடைசி நான்காம் வயது பிள்ளையுடன் ஒரு அறைக்குள் நுளைந்தாள். கதவுகள் ஜன்னல்களை மூடினாள். பின் சமையல் எரிவாயுவை திறந்துவிட்டு தனது குழந்தையை அணைத்தபடி மரணத்தை எதிர்நோக்கியபடி படுக்கையில் சாய்ந்தாள்.

குழந்தை "அம்மா.." இப்போழுதுதானே படுக்கையில் இருந்து எழுந்தோம் ஏனம்மா கதவை மூடினீர்கள்? ஒரே சூடாக இருக்கிறது? என்று பல கேள்விகள் கேட்டுக்கொண்டே இருந்தது. "பேசாமலிரு" என்று கூறுவதை தவிர அவளால் வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை. அப்போழுது பக்கத்தில் உள்ள வீட்டில் உள்ள ஒரு வானொலி பெட்டியில் பாடல் ஒன்று அவள் காதில் கேட்கட்டாள் அந்த பாடல்...

"பாவ சஞ்சலத்தை நீக்க பிராண நன்பன தான் உண்டே!
பாவபாரம் தீர்ந்து போக மீட்ப்பர் பாதம் தஞ்சமே!
சால துக்க துன்பத்தாலே! நெஞ்சம் நொந்து சோருங்கால்!
துன்பம் இன்பமாக மாறும் ஊக்கமான ஜெபத்தால்!
கஷ்ட நஷ்டம் உண்டானாலும் இயேசுவண்டை சேருவோம்!

இந்த பாடலை கேட்டபோது இயேசுவின் அன்பு அந்த தாயின் உள்ளத்தில் ஒரு நம்பிக்கை அளித்தது. உடனே படுக்கையில் இருந்து எழுந்த அவள் தன் பிள்ளையை துக்கி கொண்டு வேகமாக அந்த அறையிலிருந்து வெளியேறினாள். இயேசு சுவாமி என்னை மன்னியும் என் பாவங்களை மன்னியும். எங்கள் கவலைகளை போக்கும். எங்கள் குடும்பத்தை காப்பாற்றும் என்று தெம்பி தெம்பி அழுதாள்.


அன்பே உருவான இயேசு அந்த தாயின் கதறலை கேட்டார். அவளுக்கு ஆறுதல் அளித்தார். இழந்து போன் ஆசிகளை ஒவ்வொன்றாக அக்குடும்பத்திற்க்கு அளித்தார்!.




"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்" (பிலி. 4:6).

*Mr. Nelson Sopitha Raj*

# Disappointment



When you are disappointed in life, it is easy to blame yourself and others. Often it is difficult to know what to say or do because one cannot fully discern the real cause or purpose of the disappointment.

Disappointment is often an emotional reaction to our own failure - or someone else's - to achieve a desire, hope, dream or goal. This can cause us to lose faith in a person we depend on, possibly even a loved one.

We all end up in a heartbreaking place at some point in our lives, feeling sad, alone, and perhaps not having the courage to hope again. The reasons for this can be any like.

Friends disappear, dreams shatter, the best laid plans go awry, other Christians let you down, people disappoint you, and you disappoint yourself.


Is God Unfair? Unjust? No, it can't be, even though it looks and feels that way from our perspective. The exact definitions of justice that we use to distinguish right from wrong come from him. His words show us who he really is.
The Lord is righteous in all his ways, gracious in all his works (Psalm 145:17).



The Gospel of John tells us that Jesus loved Martha, her sister Mary, and her brother Lazarus. Therefore, the two women did not think it necessary to say anything more to the Lord than, "The one you love is sick" (John 11:3). Their expectation was that as soon as Jesus heard these words, He would come and heal their brother. But the Lord did not depart for two more days.

When Martha met Jesus, she was disappointed because he had not come immediately and allowed his delay Lazarus to die. She did not recognize his intention.

I understand that sometimes our experience will be hard. Hard on our hearts. Hard to understand. Hard to bear. But I have learned that it will never be impossible to walk through it. I understand that when we go through a heartbreaking time, we can feel like God is far away, even though He promised to never leave us nor forsake us (Deuteronomy 31:6). I understand that our head can tell us that God is trustworthy, but in a moment of painful disappointment, our heart can tell us that He is not there at all. That he doesn't see it and doesn't care.



But truly, God has a reason for the disappointments He allows in our lives. He could prevent them, but He wants us to discover His purpose.

**His desire is for us to act out of trust and to make our circumstances a glory to Him (John 11:4, 25).**

When disappointments come, will you be stalled and derailed from the Lord's will for your life? Or will you begin to understand His purpose so that you can learn from these situations?




THE RIGHT ANSWER IS SIMPLY TO TRUST HIM.

*Mrs Sunitha Ravi*

# ஆபத்திற்குப் பயப்படாமல்...

ஆண்டவருக்கு நாம் எப்படி செவிகொடுக்கிறவர்களாகக் காணப்பட முடியும்? அவருடைய வார்த்தையைப் பற்றிக்கொண்டு அதின் அடிப்படையில் வாழுகிற வாழ்க்கையின் மூலமாகவே. அவ்விதமாக வாழும்போது என்ன ஒரு அருமையான ஆசீர்வாதம் இருக்கிறது என்பதைக் குறித்து அருமையாய்ச் சொல்லுகிறார், விக்கினமின்றி வாசம் பண்ணி; அதாவது ஒரு மெய்யான பாதுகாப்பு நமக்கு கிடைக்கின்றது. இதுவே இந்த உலகத்தில் கிடைக்கக்கூடாத மிகப்பெரிய பாதுகாப்பு. மேலும் ஆபத்திற்குப் பயப்படாமல் என்றும் சொல்லப்படுகிறது.

பொதுவாக பயம் என்பது மனிதனுடைய வாழ்க்கையில் ஏதாவது ஒரு விதத்தில் அவனை அதிகமாக பாதிக்கின்றது. எதிர்பாராத பல திருப்பங்கள், ஏமாற்றங்கள் பலவிதமான பிரச்சனைகள் நெருக்கங்களை சந்திக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் நாம் ஆண்டவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கும் பொழுது, இவ்விதமான ஆபத்திற்கு நாம் பயப்படாமல் இருப்பது மாத்திரமல்ல, அமைதியாயிருப்போம் என்றும் சொல்லப் படுகிறது.




இந்த உலகத்தில் மெய்யான அமைதியுள்ள வாழ்க்கை நாம் தேவனில் நிலைத்திருக்கும் பொழுது மாத்திரமே. அது எவ்விதம் என்றால், ஆண்டவருடைய வார்த்தையைப் பற்றிக்கொண்டு வாழுகிற வாழ்க்கையின் மூலமாகவே. இதை நாம் தெளிவாக விளங்கிக்கொள்வது அவசியம். இல்லையென்றால் நாம் மற்ற மனிதர்களைப் போல பயத்தினாலும் நெருக்கத்தினாலும் பல விதங்களில் நாம் பாதிக்கப்பட்டு ஒரு இளைபாறுதலற்ற ஒரு வாழ்க்கையைக் கொண்டிருக்கிறவர்களாக காணப்படக்கூடும்.

தேவனுடைய வார்த்தையை நாம் பற்றிக் கொள்வோம். அதில் நாம் சார்ந்து இளைபாறுதல் அடைந்து ஆபத்துக்கு பயப்படாமல் சுகமாய் வாழக் கற்றுக்கொள்வோம். அதுவே நமக்கு மெய்யான பாதுகாப்பு. தேவன் அவ்விதமான வழிகளில் பிரியமாய் இருக்கிறார்.

# நீ உனக்கு சொந்தமல்லவே

## பாடல் பிறந்த கதை

நீயுனக்கு சொந்தமல்லவே மிட்கப்பட்ட
பாவி நீயுனக்கு சொந்தமல்லவே
நீயுனக்கு சொந்தமல்லவே
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம்

சிலுவைமரத்தில் தொங்கி மரித்தாரே
திரு ரத்தம் ரத்தம்
திரு விலாவில் வடியுது பாரே
வலிய பரிசத்தால் கொண்டாரே
வான மகிமை யுனக்கீவாரே

இந்த நன்றியை மறந்த போனாயோ
இயேசுவை விட்டு எங்கேயாகிலும்
மறைந்து திரிவாயோ

சந்ததமுனதிதயங் காயமும்
சாமி கிறிஸ்தினுடையதல்லவோ

பழைய பாவத்தாசை வருகுதோ
பிசாசின் மேலே பட்சமுனக்குத்
திரும்ப வருகுதோ
அழியும் நிமிஷத் தாசை காட்டியே
அக்கினிக்கடல் தள்ளுவானேன்

பிழைக்கினிம் அவர்க்கே பிழைப்பாயே
உலகைவிட்டுப் பிரியனும்
அவர்க்கே மரிப்பாயே மரிப்பினும்
உழைத்து மரித்தும் உயிர்த்த நாதரின்
உயர்பதவியில் என்றும் நிலைப்பாய்

கவிஞர் கே.தேவசகாயம் சாட்சியாபுரத்தை சேர்ந்தவர் அவருக்கு மேசியாதாஸ், தேவநேசன் என்று இரு குமாரர்கள் உண்டு. ஒரு நாள் இவ்விருபையன்களும் பள்ளிக்குப் புறப்படும் நேரத்தில் ஏதோ ஒரு பொருளுக்காக "இது என்னுடையது உன்னுடையது அல்ல" என்று கூச்சலிட்டு சண்டை போட்டனர். அவர்களை சமாதானப்படுத்த முயன்ற தந்தையின் உள்ளத்தில் மேலே குறிப்பிட்ட பவுலடியார் என்ற அறிவுரை நினைவில் வந்தது.

இந்நிகழ்ச்சியால் உள்ளக்கிளர்ச்சி பெற்ற கவிஞர், இந்தப்பாடலின் முதல் வரியை நீயுனக்கு சொந்தமல்லவே..தாசா..நேசா..என்பதாக எழுதினார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் இறைவன் இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற ரத்தத்தால் மீட்டெடுக்கப்பட்ட அடிமை; எனவே தனக்கென்று உரிமைப்பாராட்ட தகுதியற்றவன். இக்கருத்தை மையமாகக் கொண்டு இந்த அருமையான பாடலை தேவசகாயம் தன் பிள்ளைகளுக்குகென எழுதினார்.

பிற்காலத்தில் திருச்சபை பிள்ளைகளாகிய நாம் அனைவரும் பயன்படுத்தும் வகையில், ..தாசா..நேசா.. என்ற வார்த்தைகள் நீக்கப்பட்டு மீட்கப்பட்டபாவி என்ற வார்த்தைகள் அவ்விடத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. ஜீவனையே சிலுவையில் கிரயமாக செலுத்தி பாவிகளாகிய நம்மை மீட்டெடுத்த இயேசுவுக்கே நாம் சொந்தம்.

எனவே பழைய ஏற்பாட்டு கால விருப்ப அடிமைகளைப் போல, நாமும் தொடர்ந்து ஜீவ காலம் முழுவதும் அவரையே அண்டி வாழவேண்டும். அவரை விட்டு ஓட முயற்சிக்கலாகாது. பழைய வாழ்க்கையின் மீது மீண்டும் நாட்டம் கொள்ள கூடாது என்ற கிறிஸ்தவ தத்துவக்கருத்துக்களை அழகாக, தெளிவாக இப்பாடலில் தனது மைந்தர்களுக்காக கவிஞர் எழுதியிருக்கிறார்.

இப்பாடலின் கடைசி சரணத்தை சார்ந்த ஒரு நிகழ்ச்சியை கிறிஸ்தவ அருட் கவிஞராகிய அருள்திரு டாக்டர் தயானந்தன் பிரான்சிஸ் இவ்வாறு எழுதுகிறார்; யாழ்ப்பாணத்தை சேர்ந்த டாக்டர் டி.றி.நைல்ஸ் என்ற பெரியார் வேலூர் கிறிஸ்தவ மருத்துவமனையில் சிகிச்சைக்காக வந்திருந்தார். அவருக்கு புற்றுநோய் கண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டபோது; அவர் எவ்விதம் மனக்கலக்கமும் அடையாமல் மருத்துவர்களையும் நண்பர்களையும் பார்த்து, நாம் பிழைத்தாலும்-மறைத்தாலும் ஆண்டவருக்கு சொந்தமானவர்கள் என்று கூறினார்.

இந்த நிலையான கிறிஸ்தவ நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் பாடலை கவிஞர் தேவசகாயம் எவ்வளவு நேர்த்தியாக எழுதியிருக்கிறார். கவிஞர் தேவசகாயம் இயற்றிய மற்றிரு பாடல்களும் திருச்சபை மக்களால் விரும்பி பாடப்படுகின்றன. “வா பாவி மலைத்து நில்லாதே வா” என்ற அன்பின் அழைப்பு பாடலும், “அடைக்கலம் அடைக்கலமே” என்ற நம்பிக்கை ஊட்டும் பாடலும் ஆகும்.


**நீயுனக்கு சொந்தமல்லவே...**

**நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம்..!!!**



# JUNIOR-B





Teacher: Mrs. Augusta Lawrance

Kids Coloring

Kinder



# LET'S GO Church



BEGINNER

Kids Coloring


Primary Word Search

# DANIEL AND THE LIONS

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| H | S | H | B | Y | M | S | U | O | R | D | X | F | L | L | W | N | Q | K | J |
| Y | H | P | N | A | K | X | H | L | Z | L | J | I | V | I | O | C | P | S | A |
| A | I | E | B | E | N | K | I | P | J | D | U | W | R | O | B | D | R | M | N |
| H | I | B | B | A | O | Q | A | P | P | I | N | G | S | N | R | A | I | J | G |
| U | N | B | V | R | B | E | U | W | P | I | E | C | T | S | X | N | N | E | E |
| A | Q | E | D | A | E | Y | D | E | W | B | B | C | A | N | G | I | C | R | L |
| H | K | L | U | T | A | W | L | F | T | O | U | Y | T | J | Q | E | E | U | W |
| K | B | S | K | Z | J | J | S | O | N | D | C | J | U | H | J | L | S | S | G |
| Q | V | H | J | F | Y | S | M | X | N | G | H | A | E | Q | R | K | R | A | Z |
| X | R | A | E | P | E | A | V | O | D | Z | A | S | U | G | B | V | P | L | W |
| P | J | Z | L | A | F | P | W | N | Z | V | D | W | P | S | N | Q | W | E | I |
| W | I | Z | G | D | T | P | I | V | J | H | N | Z | N | D | G | N | U | M | Z |
| X | H | A | W | H | Y | E | M | P | C | E | E | P | S | W | A | C | P | L | W |
| M | W | R | E | Q | A | G | U | F | T | M | Z | M | S | P | B | Q | D | F | U |
| Q | A | F | E | K | O | P | U | X | S | Y | Z | J | J | W | D | S | A | Z | S |
| C | X | G | F | E | A | S | T | H | O | U | A | K | Q | H | G | F | R | E | H |
| X | K | I | I | I | E | M | E | W | S | P | R | P | S | R | O | N | I | L | N |
| M | P | Z | F | J | K | Y | Y | L | K | I | A | D | R | E | A | M | U | N | A |
| T | Y | P | E | R | S | I | A | X | G | U | P | H | X | G | M | L | S | T | C |
| K | E | M | T | N | R | O | N | W | N | M | R | D | E | N | Z | J | N | A | T |

| | | |
|---|---|---|
| YAHUAH | MAGI | DREAM |
| DARIUS | DEN | JERUSALEM |
| FEAST | LIONS | BANQUET |
| PRINCES | BABYLON | STATUE |
| HEBREW | BELSHAZZAR | DANIEL |
| NEBUCHADNEZZAR | PERSIA | ANGEL |

# DANIEL AND THE LIONS




## ACROSS


2) Daniel prayed _______ times a day. (Daniel 6:10 ESV)
3) Daniel had understanding in all _____ and dreams. (Daniel 1:17 ESV)
6) "My God sent His _____ and shut the lions' mouths…" (Daniel 6:22 ESV)
8) Daniel was cast into the den of _____. (Daniel 6:16 ESV)
9) "King _____ wrote to all the peoples, nations, and languages that dwell in all the earth…" (Daniel 6:25 ESV)

## DOWN

1) King Nebuchadnezzar had _____.." (Daniel 2:1 ESV)
2) Daniel was taken out of the den and no harm was found on him because he had ________ in his God. (Daniel 6:23 ESV)
4) The king spent the night _________. (Daniel 6:18 ESV)
5) The king sealed the den with his own _____. (Daniel 6:17 ESV)
7) The king could not change the new ____. (Daniel 6:15 ESV)

# Surviving the DEN OF LIONS!

1. Which king laid siege to Jerusalem?
2. What was Daniel's new name in Babylon?
3. In Babylon , how many years did Daniel study?
4. What did Daniel do for King Nebuchadnezzar?
5. Who refused to worship King Nebuchadnezzar's golden image & why?
6. What did Daniel eat instead of the king's meat and drink?
7. Who was the fourth person in the fiery furnace along with Daniel's friend?
8. Daniel had a dream about four things, explain ?
9. How was Daniel protected from the lions in the den?
10. What do you learn from Daniel's life ?



Inter & Senior

# The PARTICIPANTS




| Kids Colouring | Word Search | Word Match | Cross Word |
|---|---|---|---|
| HAZEL HARTLYN | AJINSHA | JASON ERIC | ROSHAN |
| CRASSLIN DEVONA | SHERINSHA | ERIC AARON | JOSHUA |
| JANIA PRENI | JOHAN SANJO | JEREMIAH | SHELBINO |
| JOHAN SANJO | JASON ERIC | JONATHAN | JASON ERIC |
| REAGAN SHAN | JEREMIAH | | JONATHAN |
| CHRIS GABRIEL | JONATHAN | | |
| JEMIMA ASHNI | | | |






ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள்,
அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன்
ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us ON or BEFORE 20th of every month, in the following format.

**Email Subject:** Your name / Quiz type / Month-Year


**To Church Email:** csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

**You can also download our Monthly Manna by visiting our Church Website.**

**http://www.csitamilparishalain.org**

சர்ச் இணையத்தளத்தை பயன்படுத்தி மாதாந்திர மன்னாவை நீங்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.




# 11 - 20

# அப்போஸ்தலர் நடபடிகள்

## QUESTIONS

1. பேதுருவின் வீட்டின் முன்பு எத்தனை பேர் நின்றார்கள் ? அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள்?
2. எங்கே அநேகர் கூடி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள் ?
3. மாய வித்தைக்காரனின் பெயர் என்ன ? அவன் யார் ?
4. ---------ஊரில் வசனத்தைப் பிரசங்கித்து---------பட்டணத்துக்குப் போனார்கள் ?
5. பர்னபா யாரை அழைத்துக்கொண்டு போக வேண்டும் என்றார் ?
6. லீதியாள் என்னும் ஸ்திரியின் ஊர் எது ?
7. யாரிடத்தில் ஜாமீன் வாங்கிக்கொண்டு மக்களை விட்டுவிட்டார்கள் ?
8. அகாயா நாட்டின் அதிபதியின் பெயர் என்ன ?
9. பவுல் ஆசியாவில் தங்கிய போது யாரை மக்கெதோனியாவுக்கு அனுப்பினார் ?
10. பவுலின் பிரசங்கத்தைக் கேட்ட வாலிபனின் பெயர் என்ன ?

### மே’மாத விடைகள் / எழுதியவர்கள்

1. அப்போ 1:15 | 2. அப்போ: 2:16 | 3. அப்போ: 3:11 | 4. அப்போ: 4:6 | 5. அப்போ: 5:18
6. அப்போ: 6:9 | 7. அப்போ: 7:11 | 8. அப்போ: 8:9 | 9. அப்போ: 9:33 | 10. அப்போ: 10:24


திருமதி. பிப்லின் நெல்சன், திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல், திருமதி. பிரிஸ்சில்லா ஜாண்சன், செல்வி. அஜீன்ஷா, செல்வி. ஷெறின்ஷா, திருமதி. ஜமுனா ராணி, திருமதி. ராதிகா செல்வகுமார், திருமதி. ஜெயந்தா ஜாண், திருமதி. பமீலா டேனியல், திருமதி. ஜெனிபர் இம்மாக்குலேட், திருமதி. அகஸ்டா லாரன்ஸ், திருமதி. ரோஸ்லின் பாலாஜி, திருமதி. ஹெப்சிபாய் நேசமணி, திருமதி. ஜெயின் ராஜவேல், திருமதி. அனிதா.எஸ்.ராஜன்

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

**Your Name / Bible Quiz / June’21 | Sent to: csitcalain@gmail.com**




| | |
|---|---|
| 2-Jun | Mrs. Baby Christy Monalizha |
| 4-Jun | Mrs. Esther Gerald Antony |
| 5-Jun | Mrs. Shalini Rajesh |
| 6-Jun | Mr. Joel Ranjith Kumar |
| 6-Jun | Mr. Jaffrin Jerald |
| 8-Jun | Mr. Ujin Raj |
| 9-Jun | Ms. Ansilin Suga |
| 10-Jun | Mr. Saman Raj Kumar |
| 10-Jun | Mr. Chandrasekar.P |
| 12-Jun | Mr. Thiyagu Murugaraj |
| 16-Jun | Mr. Ashok Daniel Prabakaran |
| 17-Jun | Mrs. Anitha Jose |
| 22-Jun | Mr. Melbin Paul |
| 23-Jun | Mr. Belfer John Sigamony |
| 24-Jun | Mr. Ashok Prasad |
| 26-Jun | Mr. Biddu Mohan |
| 27-Jun | Mrs. Shiny Rebeca Prabhu |
| 30-Jun | Mr. Mark Nesamony |
| 30-Jun | Mrs.Sinduja Sathish Kumar |



# JUNE
## CELEBRANTS




1 MR. JEREMIAH KINGSTON &
MRS. OLIVIA SHERIN

2 MR. ASHOK DANIEL &
MRS. PRINCY ASHOK

6 MR. ASHOK PRASAD &
MRS. EBEN A PRASAD

15 MR. S. DEVA PRAKASH &
MRS. SHEEBA

21 MR. BALAJI RAMAIYAN &
MRS. ROSELIN TAMIL SELVI

29 MR. CELIN JOSE &
MRS. ANITHA






## How it Works




**STEP 1** DONATE DAILY IN THIS BOX

**STEP 2** COLLECT, IDENTIFY & SEND



**STEP 3** EDUCATE & CHANGE CHILD'S LIFE

STARTING FROM NEXT ACADEMIC YEAR; THE CBS MINISTRY KIDS TOGETHER WILL SUPPORT, EDUCATE AND CHANGE ONE KID'S LIFE.

COIN SAVNG BOX WILL BE GIVEN TO ALL KIDS AND EACH KID NEED TO DROP ONE DIRHAM/DAY; AND THAT WILL BE COLLECTED FROM CBS KID'S HOUSE BY OUR CHURCH VOLUNTEER AND SENT TO THE KID FOR HER EDUCATION.


# KORIJHOLLA CHURCH PROJECT
# கொரிஜ்ஹோலா ஆலயத் திட்டம்




## இணைந்து கட்டுவோம் வாருங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபையின் அங்கத்தினர்களே, நமது திருச்சபையின் ஆண்கள் சங்கம் மூலமாக ஒடிசா மாநிலத்தின் கொரிஜ்ஹோலா கிராமத்தில் தேவாலயம் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நாட்களில் ஆலயமின்றி வீதிகளிலும், வீடுகளிலும் ஆராதித்துக் கொண்டிருக்கும் சுமார் 65 குடும்பங்களுக்கு இது பயனுள்ளதாயிருக்கும். ஆகவே நமது திருச்சபையின் ஆண்கள் சங்க அங்கத்தினர்கள் யாவரும் முன்வந்து ஆண்டு உழைப்பின் சதமான தொகையினை மொத்தமாகவோ அல்லது தவனை முறையிலோ கொடுத்து; கர்த்தருடைய ஆலயத்தை இணைந்து கட்ட ஒன்றிணைவோம். அனுதின ஜெபத்தாலும் இவ்வூழியத்தை தாங்குவோம்.






EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
POST BOX. 67747 | TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 343
Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org




STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY